Beulah. 2382

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2015 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2015 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2015

ක්‍රිස්තියානි ශිෂ්ටාචාරය II
கிறிஸ்தவ நாகரிகம் II
Christian Civilization II

49 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

அறிவுறுத்தல்கள் :

* பகுதி I இல் எவையேனும் **இரண்டு** வினாக்களையும் பகுதி II இல் எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
* ஒவ்வொரு வினாவுக்கும் **20** புள்ளிகள் உரித்தாகும்.

## பகுதி I

1. (i) அலெக்சாந்திரியா, அந்தியோக்கியா கல்லூரிகளின் படிப்பினைகள் **இரண்டு** வீதம் எழுதுக.
   (ii) ஆரம்பத் திருச்சபையின் தந்தையர்கள் **நால்வரைப்** பெயரிடுக.
   (iii) மத்திய காலத்தில் கல்வி முன்னேற்றத்திற்குத் திருச்சபை ஆற்றியுள்ள **நான்கு** பங்களிப்புகளைக் குறிப்பிடுக.
   (iv) விஞ்ஞானத்தின் முன்னேற்றத்திற்குப் பங்களிப்புச் செய்த **நான்கு** கிறிஸ்தவ விஞ்ஞானிகளின் பெயர்களை எழுதுக.
   (v) கல்வி, தொழில்சார் சேவைகளின் முன்னேற்றத்திற்கு இலங்கைத் திருச்சபை பங்களித்துள்ள விதங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

2. (i) ஆசிய ஆயர் பேரவையின் உறுப்பினர்களாகப் பங்குகொள்ளும் **நான்கு** நாடுகளைப் பெயரிடுக.
   (ii) இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் **நான்கு** திருச்சபைகளைப் பெயரிடுக.
   (iii) ஆரம்பக் கிறிஸ்தவர்களின் சமூக வாழ்வியல்களில் காணப்பட்ட **நான்கு** பண்புகளைக் குறிப்பிடுக.
   (iv) 4ஆம் நூற்றாண்டிலிருந்து உரோமையப் பேரரசில் கிறிஸ்தவம் பரவ ஏதுவான **நான்கு** காரணிகளைக் குறிப்பிடுக.
   (v) "கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வெகுவிரைவில் நிகழவிருக்கின்றது" என்னும் எதிர்பார்ப்பு ஆரம்பத் திருச்சபையினரின் வாழ்வில் செல்வாக்குச் செலுத்திய **நான்கு** விடயங்களைக் குறிப்பிடுக.

3. (i) புனித இஞ்ஞாசியார் தமது 'ஆன்மீகப் பயிற்சிகள்' (Spiritual Exercises) என்னும் நூலை எழுதுவதற்கு உதவியாயமைந்த **நான்கு** நூல்களைப் பெயரிடுக.
   (ii) புனித சிலுவை அருளப்பர் ஆன்மீக வாழ்வு பற்றி எழுதிய **நான்கு** நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
   (iii) புரட்டஸ்தாந்து சீர்திருத்தத்தின் பின் இயேசு சபையினர் கத்தோலிக்க மறையை அறிமுகம் செய்த **நான்கு** நாடுகளைக் குறிப்பிடுக.
   (iv) புரட்டஸ்தாந்து சீர்திருத்தத்தின் காரணமாக கத்தோலிக்க திருச்சபை அடைந்த **நான்கு** நன்மைகளைக் குறிப்பிடுக.
   (v) 'மொசேயிக்கலை'யின் **நான்கு** பண்புகளைக் குறிப்பிடுக.

## பகுதி II

4. உலக நாகரிகமும் கிறிஸ்தவ நாகரிகமும் ஒன்றின் முன்னேற்றத்திற்கு மற்றையது பங்களிப்புச் செய்துள்ளன.
   (i) நைல்நதி நாகரிகம் பற்றி விளக்குக.
   (ii) பலஸ்தீனத்திற்கு அண்மையிலுள்ள நாடுகளில் அக்காலத்தில் காணப்பட்ட நாகரிகங்கள், யூத நாகரிகத்தின் முன்னேற்றத்தில் ஏற்படுத்தியுள்ள செல்வாக்கினை விளக்குக.
   (iii) கிறிஸ்தவத்தின் ஆரம்பத்தால் எவ்வாறு புதிய சமூகம் உருவாக்கப்பட்டது என்பதனை விபரிக்குக.
   (iv) ஐரோப்பிய நாகரிகத்தின் வளர்ச்சிக்குத் திருச்சபை எவ்வாறு பங்களிப்புச் செய்துள்ளது என்பதனை விளக்குக.

[பக். 2 ஐப் பார்க்க

5. திருச்சபையின் ஆன்மீக, சமூக விருத்திக்கு ஆச்சிரம, துறவற சபைகள் பெரிதும் உதவியுள்ளன.
   (i) ஆச்சிரம வாழ்வின் ஆரம்பம் பற்றி விபரிக்குக.
   (ii) வேலை மட்டில் ஆசீர்வாதப்பர் சபைத் துறவிகளின் மனப்பாங்கை விளக்குக.
   (iii) இரவலர் சபைகளின் தோற்றத்துக்கு அடிப்படையாக அமைந்த பின்புலத்தை விபரிக்குக.
   (iv) ஐரோப்பாவில் கல்வி வளர்ச்சிக்கு ஆச்சிரம, துறவற சபைகளின் பங்களிப்பை விளக்குக.

6. ஆரம்பம் முதல் திருச்சபை நலன்புரி, மனித நேயப் பணிகளில் ஈடுபட்டு வந்துள்ளது.
   (i) ஆரம்ப காலத்தில் திருச்சபை மனித நேயப் பணிகளில் ஈடுபட்ட விதத்தினை விபரிக்குக.
   (ii) திருத்தெந்து சங்கத்தின் பின் ஆரம்பிக்கப்பட்ட துறவற சபைகள் மனித நேயப் பணிகளிலும் நலன்புரிப் பணிகளிலும் ஈடுபட்ட விதத்தினை விளக்குக.
   (iii) இலங்கையில் பணியாற்றிய மிசனறிமார் மனித நேயப் பணிகளில் எவ்வாறு ஈடுபட்டன என்பதை விளக்குக.
   (iv) இன்றைய இலங்கைக் கத்தோலிக்க திருச்சபை நாட்டின் சமூக, நலன்புரிச் செயற்பாடுகளில் பங்களித்துள்ள விதத்தை விபரிக்குக.

7. திருச்சபை கல்வி மட்டில் தனது விசேட கரிசனையைக் காட்டியுள்ளதுடன் அதற்காக கூடிய பங்களிப்பையும் நல்கியுள்ளது.
   (i) 1960 இல் பாடசாலைகள் அரசுடைமையாக்கப்பட்டமையினால் ஏற்பட்ட சாதகமான, பாதகமான விளைவுகளை விபரிக்குக.
   (ii) இலங்கையின் கல்விக்கு இன்றைய திருச்சபை ஆற்றியுள்ள பணிகளை விளக்குக.
   (iii) மத்திய கால ஐரோப்பிய கட்டடக்கலைக்கு திருச்சபை ஆற்றியுள்ள பங்களிப்பை விபரிக்குக.
   (iv) ஆயர் கிறிஸ்தோப்பர் போஞ்சின் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிட்டு, அவர் இலங்கையின் கல்வி வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்புப் பற்றியும் விபரிக்குக.

8. திருச்சபை கிறிஸ்தவ சபைகளுக்கிடையிலான ஒற்றுமையையும் ஏனைய சமயங்களுடனான உரையாடலையும் வலியுறுத்துகின்றது.
   (i) "கிறிஸ்தவ சபைகளுக்கிடையே நிலவிய குரோதப் போக்கு 20ஆம் நூற்றாண்டிலிருந்து படிப்படியாக குறைய ஆரம்பித்தது." இதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.
   (ii) கிறிஸ்தவ சபைகளுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்த எவ்வாறான விவிலிய, வரலாற்று ஆதாரங்களை முன்வைக்கலாம் என்பதனை விளக்குக.
   (iii) கிறிஸ்தவர் என்னும் வகையில் இலங்கையிலுள்ள பல்வேறு இனங்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான உமது பரிந்துரைகளை முன்வைக்குக.
   (iv) இலங்கையிலுள்ள பல்வேறு மதங்களுக்கிடையில் எவ்வாறு புரிந்துணர்வை ஏற்படுத்தலாம் என்பதனை விபரிக்குக.

* * *